சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: திரு. வா. சுந்தரராஜ்,எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2023-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் வியாழக்கிழமை

இடை மனு எண்.3/2022

இன்

அசல் வழக்கு எண்.140/2018

...

விஜயா ... மனுதாரர்/1-ம் பிரதிவாதி

/ எதிர் /

மாணிக்கம் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக 15.03.2023-ம் தேதியன்று வந்தபோது மனுதாரர்/1-ம்பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.C.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.C.இரமணிதுரை அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞரின் வாதங்களை கேட்டும், மனு கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## <u>உ த் த ர வு</u>

கடந்த 29.06.2022-ம் தேதி மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவினை ரத்து செய்து இந்த மனுவுடன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையினை ஏற்றுக்கொண்டு வழக்கினை விசாரணைக்கு உத்திரவிட கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 9, விதி 7 மற்றும் சிபிசி பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> : -**

அசல் வழக்கானது கடந்த 29.06.2022ம் தேதி மனுதாரர் தரப்பு பதில் வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. ஆனால் அன்றைய தினம் பதில் வழக்குரை தயார் செய்ய தேவையான ஆவணங்கள் கிடைக்காத

காரணத்தினால் மனுதாரரால் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே அன்றையதினம் மனுதாரருக்கு எதிராக எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டுவிட்டது. மேற்படி காரணமும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தற்பொழுது மனுதாரர் எதிர்வழக்குரையினை தாக்கல் செய்துள்ளார். எனவே 29.06.2022-ம் தேதி மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவினை ரத்து செய்து இந்த மனுவுடன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையினை ஏற்றுக்கொண்டு வழக்கினை விசாரணைக்கு உத்தரவிடவேண்டியது அவசியமாக உள்ளது. இல்லா விட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் எனவே மனுதாரரின் மனுவை ஏற்று உத்தரவிடவேண்டும்.

**3. <u>எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரை : -</u>**

மனுதாரரின் மனுவானது 2வது முறையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கு தாக்கல் செய்து சுமார் 4 வருடங்களாக மனுதாரர் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது. வழக்கை காலம் கடத்தும் நோக்கத்துடன் தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் மனு அனுமதிக்க தக்கதா என்பதேயாகும்?

**5.** இருதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6.** மனுதாரர் தரப்பில் இதே பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவானது 18.04.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டு மீண்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இது 2வது தடவையாக இருந்தபோதிலும் வழக்கினை இறுதியாக தீர்மானம் செய்வதற்கு இந்த மனுவை எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**7.** முடிவாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் ரூ.1000/-த்தை எதிர்மனுதாரருக்கு 27.03.2023-ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் இம்மனுவானது தானாக தள்ளுபடியாகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டசருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2023-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
சிவகங்கை

மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி
மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

சார்பு நீதிபதி,
சிவகங்கை

Subordinate Court
Sivagangai
I.A.No.3/2022
in
O.S.No.140/2018
in
**Draft/Fair/Order**
16.03.2023